உ
சிவமயம்



அமரர். திரு. வைத்திலிங்கம் உதயசீலன்
(கண்ணன்)

அவர்களின் 31ம் நாள் நினைவாக
வெளியிட்ட

(1)

# நினைவஞ்சலி மலர்

30-12-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும்,
உருத்திரபுரத்தை வதிவிடமாகவும்,
திருகோணமலையை வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர். திரு. வைத்திலிங்கம் உதயசீலன்

## [கண்ணன்]

## அவர்கள்



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 02-03-1957 | | 30-11-2001 |

## தீதி வெண்பா

குணநலனோடு என்றும் குறைவிலா உறவோடு
பணநலம்பரா பண்பாளர் உதயசீலன் – மனம்
வைத்தார் அம்பலத்தானடி திருக்கார்த்திகை மாத
சித்தயோக பூரணைத்திதியாம் போற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# கணபதி துதி



பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.

# தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசைபாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உனை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

# திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விழைந்த ஆரமுதே
பொய்மையே பெருகிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுற
கண்ணுதல் உடையதோர் களிற்றின் மாமுகக்
பண்ணவர் மலரடி பணிந்து போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழிபேசும் முகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினைதீர்க்கும் நின்றமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீ அருளல்வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்தபெருமானே.

## வாழ்த்து

வான்முகில்வழாது பெய்க மலிவளஞ்சுரக்க – மன்னன்
கோன்முறை அரசுசெய்க – குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## கவியரசு கண்ணதாசன்

........... வாழ்வில் துன்பம் வரவு – சுகம்செலவு இருப்பது கனவு
காலம்வகுத்த கணக்கை இங்கேயார் காணுவார் ...........

## வள்ளுவம்

உறங்குவது போலுஞ் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். உதயசீலனின்
# வாழ்க்கைச் சரிதம்

மாணிக்க தீவாம் ஈழவள நாட்டினிலே
காணிக்கை நன்நகராம் யாழ்ப்பாணத்திலே
மா, பலா, வாழை பழமரச்சோலை கொண்ட
பழம்பதியாம் அளவெட்டியூர் தனிலே
சைவ வேளாளர் வழிவந்துதித்த வைத்தியலிங்கத்திற்கும்
சீர்பெறு நன்மனையாள் கமலாதேவிக்கும்
ஊனமில்லா ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தியேழில்
செம்மை பெறு பங்குனி இரண்டாம் நாளில்
கண்டவரெல்லாம் ஐயுறும் வண்ணமாய்
மூத்தவனுக்கு அடுத்தவனாய் உதயசீலன் அவதரித்தார்.
செல்வமகனவனை பெற்றோரும் மற்றோரும்
"கண்ணா" - வென ஆசை மொழி பகன்றார்
குதலை மொழிபேசி குறுநடை புரிந்த கண்ணன்
அறுவகை நிலமதில் மருதம், முல்லை இரண்டுமே கொண்ட
உருத்திரபுரமாம் கிளிநொச்சி தன்னிலே
இருபது வயதுவரை ஆனந்தமாய்க் களித்தான்
வளரும் மதிபோல் எழுந்துவரும் நாளில்
கனிவாகப் பேசி அனைவரையும் கவர்ந்திடுவான்
வைத்தியலிங்கம் தம்பதியர் களிப்புடனே
இல்லறம் பேணி இனிதாய் வாழ்ந்துவரும் வேளை
திருமுகம் காட்டும் திருச்செல்வத்தை
தான்பெற்றான் தமையனாய்
சாத்வீகம் பொருந்திய தங்கை சுசீலாவுடன்
சமரசமாய் பள்ளிசென்று விளையாடிவர
சந்தணமாய் வந்துதித்த தங்கையொருத்தி
சிவபமடைந்த சிவச்செல்வி விஜயாவுடன்
வதனம் பெருந்திய வண்ண மலராய்
வனஜாவும் வந்துதித்தாள் இவன் சோதரியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைக் கடலெனக் கண்ட தம்பி
கருணாவும் கர்ணன்தான் இவனுக்கு
தங்கமனசு கொண்ட தங்கையென
தன் செல்லமாய்க் கண்ட தயாவுடன்
தயவான பண்புள்ள தயாபரனையும்
தான் கண்ட கட்டைக் கடைசி
தம்பியெனவே கொண்டான்.

துள்ளித்திரிந்த பள்ளிப் பருவமதில்
கற்ற விதமறிந்து தன்நிலை தெரிந்து
உற்ற கல்விதனைத் தேடி
கூட்டுறவுப் பயிற்சி குண்டகசாலையென
ஏற்றகல்வி தான்பெறவே ஓயாது பாடுபட்டான்
வாணிபத்தில் நாட்டம் கொண்டு திருமலை வந்து
நியூகோபாலன் கம்பனியில் சேர்ந்து நிதம்
ஏழை, எளியவர் நலிந்தவர், பொலிந்தவர் பாராது
இன்முகம் காட்டி வல்லவனாய், நல்லவனாய்
வாழ்ந்திட்ட 'கண்ணன்' இல்லறமதை நாடி
களனிகள், கங்கை சூழ் தெட்சண கைலாயத்திலே
ஆணிப்பொன் முத்தணிந்த மூதூரிலே
காணி நெற்குவியல் 'கிளிவெட்டி' எனும் பதியில்
செல்லத்துரை தம்பதியர் செல்வமகள் ஜெயதேவியை
வதுவை செய்து கரம்பிடித்தான்
இனிதுற இல்லறம் நடத்திடும் பொழுதே
கொஞ்சுமொழிபேச யனுசனும் இளையவனாய் கிருஷனும்
தரணி போற்றும் புதல்வர்களாய் வந்து பிறந்தனர்
செல்வம் நிறைந்தது உறவினர் மகிழ்ந்தனர்
இன்சொல் பேசி, விருந்தினர் பேணி
மனையறம் சிறந்து மனைவி குழந்தைகளுடனே
இன்பமாய் வாழ்ந்து வரும் நாள் தனிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை தீபமன்று கதிர்காமம் சென்று
கந்தனை வணங்கி மகிழ்ந்திட எண்ணிய நாளிலே
காலனை வென்றோர் யார்தான் உளரோ என
உறவினர் அனைவரும், குடும்பமும் கலங்கியேபோக
விதியின் கதை முடியும் வேளை கூடிவரவே
உற்ற நோயும் உபாதை செய்திடவே
கண்டவரெல்லாம் கதறிடும் வண்ணமாய்
துயில்வது போலவே 'கண்ணன்' இவ்வுலகை மறந்தான்
சித்தயோக பூரணை திதியில் இயற்கை வியக்க
விண்ணுலகை சிறப்பிக்க பரலோகம் சென்றான்.

******

## மனைவி புலம்பல்

நீங்காத நினைவுகளை எனக்களித்து - நீ
மீளாத்துயில் கொள்ள பரலோகம் சென்றீரே
பிஞ்சுகள் இரண்டையும் வைத்தே
தெண்டனிட்டு அழுகின்றேன் மீண்டு வாராயோ.
உனைக் கணவனாய்க் கொண்ட நாள்முதலாய்
என்ன குறை கண்டேன்
பொல்லாத காலன் வந்து கொன்று குவித்தானே
செல்வக் குழந்தைகளை எனக்களித்தே
சொல்லாமல் மறைந்தீரே
நோயாலே நீர் துயர்கொண்டபோதெல்லாம்
ஓடிவந்து பணிசெய்தேனே.
'கண்ணாளனே' இனிமேல் நான் என்ன செய்ய
உன்வரவிற்காய் பிரார்த்திப்பதைத் தவிர.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன்மார் புலம்பல்

எம்மருமைத் தந்தையே
இனிமேல் நாம் எப்போது
உனைக் காண்போம்
பாசமழை பொழிந்துவிட்டு
மறைந்து போன மாயம் என்ன.
அப்பா என அழைக்க
பிஞ்சுகள் நாம் என்ன செய்வோம்.
நிட்சயமாய் உன் நினைவு
வாழும் வரை மாறிடுமா?
இனம் பிரிந்த அன்றில்களாய்
ஏங்கித் துடிக்கின்றோம்
ஆத்மா சாந்தி பெற
எந்நாளும் துதித்து நிற்போம்

## பெற்றோர் புலம்பல்

பிறந்து நீ இருந்தபோது
பிஞ்சுவாய் அசைத்து பேசிநிற்பாயே,
இறந்த உடலைப் பார்ப்பதற்கோ,
அம்மாவை விரைந்தழைத்தாயோ,
நிரந்தரமாய் உறங்கியதை,
பெற்றமனது துடிக்குதடா,
வேறிடமோ இல்லையடா,
கண்ணீரும் வற்றியதோ
வாய்பேச மறுக்கிறதோ
'கண்ணா' என இனிமேல்
யாரை அழைப்பேனடா,
அம்மா அப்பா தேடி
அடிக்கடிதான் வந்துபோவாயே
உன்வரவிற்காய் காத்திருப்போம்
பெற்றோர் முன்னே வந்திடுவாய் ஐயா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர் புலம்பல்

கண்ணா உனைத் தேடுகின்றோம்.
கண்ணீராய் வந்து காட்டிவிட்டாயே,
என்ன தவம் செய்தோம்
அண்ணாவாய் நீ வந்து அவதரிக்க
கழுத்தறுந்த சேவல்களாய்
ஏங்கித் தவிக்கின்றோம்
தூண்டா மணிவிளக்கே 'கண்ணா'
அணைந்துபோன மாயம் என்ன?
சொந்தங்கள் பரிதவிக்க
எங்கே சென்று மறைந்தனையோ,
நாம் கண்ட ஆசைக்கனவுகள்
அழிந்து மறைந்து போய்விட்டதே,
உன்வரவிற்காய் அழுகின்றோம்
விரைந்து வர மாட்டாயோ.

## சகோதரிகள் புலம்பல்

எங்கள் அன்பு அண்ணாவே
உன்போல் உதவி செய்ய
பாரினிலே யார் உண்டோ,
உந்தன் பிரிவை இழந்து
பரிதவித்துப் போனோமே
பூத்திருந்த உனைப் பறிக்க
காலன் வந்து சென்றானே,
நீலக்கடல் செங்கடலானதோ
கோலத்தமிழன்னை ஓலம் அதிர்ந்ததோ
பரலோகம் சிறந்திடவே
பாய்ந்தோடிச் சென்றனையோ,
உன் ஆத்மா சாந்தி பெற
மலர்தூவிப் பணிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

பிஞ்சினிலே வளர்த் தெம்மை பிரியமாய் சோறுமூட்டி
அஞ்சினிலே அறிவுதன்னை ஆவலாய் எமக்களித்து
நெஞ்சினிலே எமையணைத்து நேயமாய் மிகக் களித்து
குஞ்சுகள் தன்னை கண்ணீர்க் குருதியில் நனையவிட்டுக்
கெஞ்சியும் வராத்தூரம் சென்றனையோ எம்மாமாவே.
நெஞ்சினுக்காறுதல் நீ நாளை எம் இல்லப்
பிஞ்சுகள் வழியாய் வந்து பிறந்திட வேண்டும் மாமா
பூதவுடல் அழிந்தாலும் அகலாது உன் புன் சிரிப்பு
இவ்வுலகில் நின்னைப்போல் நல்லவராய், வல்லவராய்,
நாங்கள் வாழ்ந்துன் பெருமைதனைப்
பூவுலகில் கட்டிக் காத்திடுவோமே மாமா.

## பெறாமக்கள் புலம்பல்

அன்பூட்டி எமை வளர்த்த சித்தப்பா
நெறியான வாழ்வு தந்த சித்தப்பா
எமை மறந்து நீர் சென்ற இடமேது
திரும்பாத பயணம் சென்றனையோ
மீண்டு வந்து எமை அணைக்க மாட்டாயோ,
நீங்கள் சொன்ன அறிவுரைகள்
உள்ளத்தில் அனுதினமும் ஒலிக்கிறதே
உன் ஆத்மா சாந்திபெற
தெண்டனிட்டுத் துதிக்கின்றோம்.

## மாமி புலம்பல்

ஆசை மருமகனே
செல்லாத இடம்தேடிச்
சென்றனையோ,
எல்லோரையும் விட்டுப்
பிரிந்த சென்ற மாயமென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்போல வந்து
வாய்த்து நின்றாயே
உன் ஆத்மா சாந்தி பெற வழியனுப்பி மீண்டும்
உன்வரவிற்காய் இமைப்பொழுதும்
காத்திருப்பேன்.

## உற்றார் புலம்பல்

கள்ளமில்லா உன் உருவைக் ‘கண்ணா’
கடைசிவரை ஒருபோதும் மறக்கமாட்டோம்
பசித்த ஏழைகளைக் கண்ட போதினிலே
பரிதவித்து போனவனே
உறவுமுறை தேடி விரைந்து தினம்வருவாயே,
ஏற்றம் பெற ஏணியாகி உந்துதலைத் தருபவனே
சொல்லாமல் கொள்ளாமல் எமைப் பிரிந்து சென்றாயே,
தேவருலகில் வாழ்வு பெற
அஞ்சலிகள் செய்தோமே.

## தேற்றம்

தேறு தேறு நீ மனமே சித்தும் அசத்தும் இரண்டதனில்
தேறும் போதே இவ்வுடலும் தெளிவாய் அழியும் அசத்தென்றே
கூறும் பஞ்ச பூதத்தால் கூட்டிய இந்தப் பண்டமது
நீறாய் நெருப்பில் அழிவதன்றி நிலைக்கும் உயிர்தான் அழிந்திலதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கனிய வளம்

| கனிப்பொருள் | காணப்படும் இடங்கள் | மேற்கொள்ளும் தொழில் |
|---|---|---|
| இரத்தினக்கல் | இரத்தினபுரி, எலகர, ஒக்கம்பிட்டி காவத்தை, | ஆபரணம் |
| காரீயம் | போகல, கொலன்ஹா, ஹஷட்ட | வார்ப்பு அச்சு, மை, பென்சில் கூர், வெடிமருந்து, உராய்வு, நீக்கி. |
| சுண்ணக்கல் | புத்தளம், யாழ்ப்பாணக்குடா நாடு, | சீமெந்து |
| வெண்களி | பொரலஸ்கமுவ, மீட்டியாகொட, | கடதாசி, பூச்சிகொல்லி, மைகள். |
| சிலிக்கா | மாரவில், நாத்தாண்டியா. | கண்ணாடி |
| இல்மனைட் | புல்மோட்டை, திருக்கோயில் | மைப்பூச்சு |
| மொனசைற்று | பொல்கொட்டுவ, கைக்காவல. | கதிரியக்க பொருட்கள் |
| கோரியனைற்று | | |
| இரும்புத்தாது | மாதம்பை, சேருவில. | இரும்புக்கோல்கள் |
| மைக்கா | பதுளை, அப்புத்தளை | மின் உபகரணங்கள் |
| அப்தைற்று | எப்பாவல | வளமாக்கி |
| செம்புத்தாது | சேருவல | செப்புக்கம்பி |

# இலங்கையின் கைத்தொழிற்சாலை

| பொருள் | இடங்கள் |
|---|---|
| சீனி | ஹிங்குரான, பலவத்தை, செவனகல, கந்தளாய் |
| சீமெந்து | காங்கேசன்துறை, புத்தளம், காலி. |
| மட்பாண்டம் | தங்கொட்டவ, பிலியந்தல. |
| ரயர் | களனி |
| உருக்கிருப்பு | ஒருவில |
| புடவை | பூகொடை, வியாங்கொடை, துல்கிரிய. |
| எண்ணெய்சுத்திகரிப்பு | சப்புகஸ்கந்த |
| இரும்புருக்கு | யக்கல. |
| ஒட்டுப்பலகை | ஜின் தோட்டை. |
| இராசாயணம் | பரந்தன். |
| கடதாசி | வாழைச்சேனை, எம்பிலிபிட்டிய. |
| தோற்பொருள் | மட்டக்குளி. |
| கைத்தொழில்பேட்டை | அச்சுவேலி, பள்ளேகல, எக்கல. |
| கண்ணாடி | நாத்தாண்டியா. |
| முதலீட்டு வலயம் | கட்டுநாயக்கா, கொக்கல, பியகம, பள்ளேகல. |
| ஓடு | யட்டியான, அனுராதபுரம், ஒட்டிசுட்டான். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி 12 | - | தேசிய இளைஞர் தினம் |
| பெப்ரவரி 14 | - | காதலர் தினம் |
| பெப்ரவரி 28 | - | தேசிய அறிவியல் தினம் |
| மார்ச் 08 | - | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் 13 | - | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் 22 | - | உலக குடிநீர் தினம் |
| மார்ச் 23 | - | உலக வளிமண்டல தினம் |
| ஏப்ரல் 01 | - | உலக முட்டாள் தினம் |
| ஏப்ரல் 07 | - | சர்வதேச சுகாதார தினம் |
| ஏப்ரல் 12 | - | உலக விண்வெளி தினம் |
| ஏப்ரல் 22 | - | உலக புவி தினம் |
| ஏப்ரல் 23 | - | உலக புத்தக தினம் |
| மே 01 | - | உலக தொழிலாளர் தினம் |
| மே 09 | - | உலக அன்னையர் தினம் |
| மே 31 | - | உலக புகைத்தல் மறுப்பு தினம் |
| யூன் 05 | - | சர்வதேச சுற்றுச் சூழல் தினம் |
| யூலை 17 | - | உலக வறுமை ஒழிப்பு தினம் |
| ஆகஸ்ட் 06 | - | உலக சமாதான தினம் |
| செப்டெம்பர் 08 | - | சர்வதேச எழுத்தறிவு தினம் |
| செப்டெம்பர் 25 | - | செவிப்புலனற்றோர் தினம் |
| ஒக்டோபர் 01 | - | உலக சிறுவர் தினம் |
| ஒக்டோபர் 05 | - | உலக சிறுமியர் தினம் |
| நவம்பர் 14 | - | குழந்தைகள் தினம் |
| டிசம்பர் 01 | - | உலக எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் 10 | - | உலக மனித உரிமைகள் தினம் |
| டிசம்பர் 23 | - | உலக விவசாயிகள் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டு பிடிப்புக்கள்

| | | |
|---|---|---|
| ஆகாய விமானம் | - | ரைட் சகோதரர்கள் |
| எக்ஸ்ரே | - | றோஞ்சன் |
| இடிதாங்கி | - | பெஞ்சமின் பிராங்ளின் |
| பென்சிலின் | - | அலெக்சாண்டர் பிளெமிங் |
| அம்மைத் தடுப்பு | - | லூயி பாஸ்டர் |
| கார் | - | காசுல் பென்ஸ் |
| கல்குலேட்டர் | - | பஸ்கால் |
| கணனி | - | சாள்ஸ் பாபேஜ் |
| கிராமபோன் | - | தோமஸ் ஆல்வா எடிசன் |
| மின்குமிழ் | - | தோமஸ் ஆல்வா எடிசன் |
| தொலைக்காட்சி | - | ஜோன் லொஜி பியார்ட் |
| சைக்கிள் | - | மக்மில்லன் |
| காற்று அடைத்த ரயர் | - | டன்லப் |
| ரேடியம் மூலகம் | - | மேரி கியூரி |
| தந்திக்குறியீடு | - | சாமுவேல் மோர்ஸ் |
| தொலைப்பேசி | - | அலெக்சாண்டர் கிரகம்பெல் |
| வானொலி | - | மார்க்கோனி |
| டைனமைட் | - | அல்பிரட் நோபல் |
| அணுக்குண்டு | - | ஜெராபட் ஒப்பன் பெய்மர் |
| இயந்திரத்துப்பாக்கி | - | ஜேம்ஸ் பக்கிள் |
| டீசல் இயந்திரம் | - | அடொல்ப் டீசல் |
| சேவிங்ரேசா | - | கில்லட் |
| அச்சு இயந்திரம் | - | ஜோன் கட்டன்பேக் |
| சித்திரம் | - | லியானனோ - டாவின்னி<br>மைக்கல் அஞ்சலோ |
| வானியல் | - | நிகலஸ்கொபணிகஸ்<br>யொஹன்ஸ் கெப்லர் |
| தொலைக்காட்டி | - | கலிலியோ கலிலி |
| குருதிச்சுற்றோட்டம் | - | வில்லியம் ஹாவே |
| புவியீர்ப்பு சக்தி | - | ஐசாக் நியூட்டன் |
| மதச்சீர்திருத்தம் | - | மாட்டின் லூதர் |
| மேற்கிந்திய தீவுகள் | - | கொலம்பஸ் |
| நூனாழி (நெசவு நாடா) | - | யோன்கே |
| ஜெனிநூல்நூற்கும் இயந்திரம் | - | ஜேம்ஸ் ஹக்கிறிங்ஸ் |
| நீர்ச்சட்டம் | - | றிச்சாட் ஆக்றயிட் |
| நீராவி இயந்திரம் | - | ஜேம்ஸ் வாட் |
| புகையிரதம் | - | ஜோஜ் ஸ்ரீவன்சன் |
| விளக்கு | - | ஹம்பிறி டேவி |
| மோட்டார் வண்டி | - | டெம்ளர் |
| கம்பிமூலம் தந்தி | - | மாக்கோணி |
| மியூல் | - | சாமுவேல் குறொம்ரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிமை

**இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்**
**செப்பமும் நாணும் ஒருங்கு. 951**

நடுவு நிலைமையும் நாணமும் உயர்குடியில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவரிடத்தில் இயல்பாக ஒருசேர அமைவதில்லை.

**ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந்தார். 952**

உயர்குடியில் பிறந்தவர் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம் மூன்றிலிருந்தும் வழுவாமல் இயல்பாகவே நன்னெறியில் வாழ்வர்.

**நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. 953**

உண்மையான உயர்குடியில் பிறந்தவர்க்கு முகமலர்ச்சி, ஈகை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கும் நல்ல பண்புகள் என்பர்.

**அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர். 954**

பல கோடிப் பொருளைப் பெறுவதாக இருந்தாலும் உயர்குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான குற்றங்களைச் செய்வதில்லை.

**வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பில் தலைப்பிரிதல் இன்று. 955**

தாம் பிறர்க்குக் கொடுத்துதவும் வண்மை வறுமையால் சுருங்கிய போதிலும், பழம் பெருமை உடைய குடியில் பிறந்தவர் தம் பண்பிலிருந்து நீங்குவதில்லை.

**சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற**
**குலம்பற்றி வாழ்தும்என்பார். 956**

மாசற்ற குடிப் பண்புடன் வாழ்வோம் என்று கருதி வாழ்வோர், வஞ்சனைகொண்டு தகுதியில்லாதவற்றைச் செய்யமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்**
**மதிக்கண மறுப்போல் உயர்ந்தது.** 957

உயர்குடியில் பிறந்தவரிடத்தில் உண்டாகும் குற்றம், ஆகாயத்தில் திங்களிடம் காணப்படும் களங்கம்போல் பலரறியத் தோன்றும்.

**நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின்கண் ஐயப்படும்.** 958

ஒருவனுடைய நல்ல பண்புகளுக்கிடையில் அன்பற்ற தன்மை காணப்பட்டால், அவனை அவனுடைய குடிப்பிறப்புப் பற்றி ஐயப்பட நேரும்.

**நிலத்தில் கிடந்தமை கால்காட்டும், காட்டும்**
**குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.** 959

இன்ன நிலத்தில் இருந்து முளைத்தது என்பதை முளை காட்டும். அதுபோல் குடியிற் பிறந்தவரின் வாய்சொல் அவருடைய குடிப்பிறப்பைக் காட்டும்.

**நலம்வேண்டின் நாண்உடைமை வேண்டும், குலம்வேண்டின்**
**வேண்டுக யார்க்கும் பணிவு.** 960

ஒருவனுக்கு நன்மை வேண்டுமானால் நாணம் உடையவனாக வேண்டும். குடியின் உயர்வு வேண்டுமானால் எல்லோரிடத்தும் பணிவு வேண்டும்.

## மானம்

**இன்றி அமையாச் சிறப்பின் ஆயினும்**
**குன்ற வருப விடல்.** 961

இன்றியமையாத சிறப்பை உடைய செயல்களே ஆயினும் குடிப்பெருமை தாழுமாறு வரும் செயல்களை ஒருவன் செய்யாமல் விடவேண்டும்.

**சீரினும் சீர அல்ல செய்யாரே சீரொடு**
**பேராண்மை வேண்டு பவர்.** 962

புகழோடு பெரிய ஆண்மையும் விரும்புகின்றவர், புகழ் தேடும் வழியிலும் குடிப்பெருமைக்கு ஒவ்வாத செயல்களைச் செய்யமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருக்கத்து வேண்டும் பணிதல், சிறிய**
**சுருக்கத்து வேண்டும் உயர்வு.** 963

செல்வம் பெருகியுள்ள காலத்தில் ஒருவனுக்குப் பணிவு வேண்டும். செல்வம் குறைந்து சுருங்கும் வறுமையுள்ள காலத்தில் பணியாத உயர்வு வேண்டும்.

**தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை.** 964

மக்கள் தம் உயர்வுக்கு உரிய நிலையிலிருந்து தாழ்ந்த போது, தலையிலிருந்து விழுந்து தாழ்வுற்ற மயிரினைப் போன்றவர் ஆவர்.

**குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின்.** 965

மலைபோல் உயர்ந்த நிலையில் உள்ளவரும், தாழ்வுக்குக் காரணமான செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும் தாழ்ந்து போய்விடுவர்.

**புகழ்இன்றால், புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று**
**இகழ்வார்பின் சென்று நிலை?** 966

மதியாமல் இகழ்கின்றவரின் பின்சென்று பணிந்து நிற்கும் நிலை, ஒருவனுக்குப் புகழும் தராது, தேவருலகிலும் செலுத்தாது, வேறு பயன் என்ன?

**ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று.** 967

மதியாதவரின் பின்சென்று ஒருவன் உயிர் வாழ்வதை விட, அவ்வாறு செய்யாத நிலையில் நின்று அழிந்தான் என்று சொல்லப்படுதல் நல்லது.

**மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த இடத்து?** 968

ஒருவனுடைய பெருந்தகைமை தன் சிறப்புக்கெட நேர்ந்த போது, அவன் உடம்பை மட்டும் காத்து வாழும் வாழ்க்கை சாவாமைக்கு மருந்தோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின். 969**

தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர் மானம் அழிய நேர்ந்தால் உயிரை விட்டுவிடுவார்.

**இளியவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970**

தமக்கு யாதேனும் இழிவு நேர்ந்தால் உயிர் வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தார் தொழுது ஏத்தி நிற்பார்கள்.

## பெருமை

**ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை, இளிஒருவற்கு**
**அஃதுஇறந்து வாழ்தும் எனல். 971**

ஒருவனுக்கு ஒளி ஊக்கமிகுதியே ஆகும். ஒருவனுக்கு இழிவு அந்த ஊக்கம் இல்லாமலே உயிர் வாழலாம் என்று எண்ணுதலாம்.

**பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்புஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான். 972**

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே, ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை.

**மேல்இருந்தும் மேல்அல்லார். மேல்அல்லர், கீழ்இருந்தும்**
**கீழ்அல்லார் கீழ்அல் லவர். 973**

மேல்நிலையில் இருந்தாலும் மேன்மைப் பண்பு இல்லாதவர் மேலானவர் அல்லர், கீழ்நிலையில் இருந்தாலும் இழிகுணம் இல்லாதவர் கீழ்மக்கள் அல்லர்.

**ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு. 974**

ஒரு தன்மையான கற்புடைய மகளிரைப் போல், பெருமைப் பண்பும் ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொண்டு நடந்தால் உளதாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்.** 975

பெருமைப்பண்பு உடையவர் செய்வதற்கு அருமையான செயலைச் செய்வதற்கு உரிய நெறியில் செய்து முடிக்க வல்லவர் ஆவர்.

**சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்**
**பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.** 976

பெரியாரை விரும்பிப் போற்றுவோம் என்னும் உயர்ந்த நோக்கம், அவருடைய சிறப்பை உணராத சிறியோரின் உணர்ச்சியில் இல்லை.

**இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்**
**சீரல் லவர்கண் படின்.** 977

சிறப்பு நிலையும் தனக்குப் பொருந்ததாக சீரற்ற கீழ் மக்களிடம் ஏற்பட்டால், வரம்புமீறிய செயலை உடையதாகும்.

**பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து.** 978

பெருமைப் பண்பு எக்காலத்திலும் பணிந்து நடக்கும். ஆனால் சிறுமையோ தன்னைத் தானே வியந்து பாராட்டிக் கொள்ளும்.

**பெருமை பெருமிதம் இன்மை, சிறுமை**
**பெருமிதம் ஊர்ந்து விடல்.** 979

பெருமைப் பண்பாவது செருக்கு இல்லாமல் வாழ்தல், சிறுமையோ செருக்கே மிகுந்து அதன் எல்லையில் நின்று விடுவதாகும்.

**அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான்**
**குற்றமே கூறிவிடும்.** 980

பெருமைப்பண்பு பிறருடைய குறைபாட்டை மறைக்கும். சிறுமையோ பிறருடைய குற்றத்தையே எடுத்துச் சொல்லிவிடும்.

## சான்றாண்மை

**கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.** 981

கடமை இவை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குணநலம் சான்றோர் நலனே, பிறநலம்**
**எந்நலத்து உள்ளதூஉம் அன்று.** 982

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே, மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று.

**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்.** 983

அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் சால்பு என்பதைத் தாங்கியுள்ள தூண்களாகும்.

**கொல்லா நலத்தது நோன்மை, பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.** 984

தவம் ஓர் உயிரையும் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது. சால்பு பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது.

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல், அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.** 985

ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும். அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாகும்.

**சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.** 986

சால்புக்கு உரைகல்போல் மதிப்பிடும் கருவி எது என்றால் தமக்கு ஒப்பில்லாத தாழ்ந்தோரித்திலும் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் பண்பாகும்.

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு?** 987

துன்பமானவற்றைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்யாவிட்டால், சான்றோரின் சால்பு என்ன பயன் உடையதாகும்?

**இன்மை ஒருவற்கு இளிவுஅன்று சால்புஎன்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்.** 988

சால்பு என்னும் வலிமை உண்டாகப் பெற்றால் ஒருவனுக்குப் பொருள் இல்லாத குறையாகிய வறுமை இழிவானது அன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.** 989

சால்பு என்னும் தன்மைக்குக் கடல் என்று புகழப்படுகின்றவர், ஊழிக்காலத்தின் வேறுபாடுகளே நேர்ந்தாலும் தாம் வேறுபடாமல் இருப்பர்.

**சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்**
**தாங்காது மன்னோ பொறை.** 990

சான்றோரின் சால்பு நிறைந்த பண்பு குறைபடுமானால், இந்தப் பெரிய நிலவுலகமும் தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போய்விடும்.

## பண்புடைமை

**எண்பத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்**
**பண்புஉடைமை என்னும் வழக்கு.** 991

பண்பு உடையவராக வாழும் நல்வழியை, யாரிடத்திலும் எளிய செவ்வியுடன் இருப்பதால் அடைவது எளியது என்று கூறுவர்.

**அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புஉடைமை என்னும் வழக்கு.** 992

அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ் விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.

**உறுப்புஒத்தல் மக்கள் அன்றால், வெறுத்தக்க**
**பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு.** 993

உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று, பொருந்தத்தக்க பண்பால் ஒத்திருத்தலே கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

**நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.** 994

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன் பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி, பகையுள்ளும்**
**பண்புஉள பாடுஅறிவார் மாட்டு. 995**

ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும், பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

**பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம், அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன். 996**

பண்பு உடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது. அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்துபோகும்.

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர். 997**

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், அரம்போல் கூர்மையான அறிவு உடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

**நண்புஆற்றா ராகி நயம்இல செய்வார்க்கும்**
**பண்புஆற்றார் ஆதல் கடை. 998**

நட்புக் கொள்ள முடியாதவராய்த் தீயவை செய்கின்றவரிடத்திலும் பண்பு உடையவராய் நடக்க முடியாமை இழிவானதாகும்.

**நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள். 999**

பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவர்க்கும், மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற் காலத்திலும் இருளில் கிடப்பதாம்.

**பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலம்தீமை யால்திரிந் தற்று. 1000**

பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம், வைத்த கலத்தின் தீமையால் நல்ல பால் தன் சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நன்றிஇல் செல்வம்

**வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுஉண்ணான்**
**செத்தான் செயக்கிடந்தது இல். 1001**

ஒருவன் இடமெல்லாம் நிறைந்த பெரும் பொருளைச் சேர்த்து வைத்து அதை உண்டு நுகராமல் இறந்துபோனால் அவன் அந்தப் பொருளால் செய்ய முடிந்தது ஒன்றுமில்லை.

**பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு. 1002**

பொருளால் எல்லாம் ஆகும் என்று பிறர்க்கு ஒன்றும் கொடுக்காமல் இறுகப் பற்றிய மயக்கத்தால் சிறப்பில்லாத பிறவி உண்டாம்.

**ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை. 1003**

சேர்த்து வைப்பதையே விரும்பிப் பற்றுள்ளம் கொண்டு புகழை விரும்பாத மக்கள் பிறந்து வாழ்தல் நிலத்திற்குப் பாரமே ஆகும்.

**எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்**
**நச்சப் படாஅ தவன்? 1004**

பிறர்க்கு உதவியாக வாழாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்த பிறகு எஞ்சி நிற்பது என்று எதனை எண்ணுவானோ?

**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**
**கோடிஉண் டாயினும் இல். 1005**

பிறர்க்குக் கொடுத்து உதவுவதும் தான் நுகர்வதும் இல்லாதவர்க்கும் மேன்மேலும் பெருகிய பல கோடிப் பொருள் உண்டானாலும் பயன் இல்லை.

**ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று**
**ஈதல் இயல்பிலா தான். 1006**

தானும் நுகராமல் தக்கவர்க்கு ஒன்று கொடுத்து உதவும் இயல்பும் இல்லாமல் வாழ்கின்றவன், தன்னிடமுள்ள பெருஞ் செல்வத்திற்கு ஒரு நோய் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று. 1007**

பொருள் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவாதவனுடைய செல்வம், மிக்க அழகு பெற்றவள் தனியாக வாழ்ந்து முதுமையுற்றாற் போன்றது.

**நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று. 1008**

பிறர்க்கு உதவாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவனுடைய செல்வம், ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தாற் போன்றது.

**அன்புஒரீஇத் தன்செற்று அறம்நோக்காது ஈட்டிய**
**ஒண்பொருள் கொள்வார் பிறர். 1009**

பிறரிடம் செலுத்தும் அன்பையும் விட்டுத்தன்மையும் வருத்தி அறத்தையும் போற்றாமல் சேர்த்து வைத்த பெரும் பொருளைப் பெற்று நுகர்பவர் மற்றவரே.

**சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி**
**வறம்கூர்ந் தனையது உடைத்து. 1010**

புகழ் பொருந்திய செல்வர் உற்ற சிறிய வறுமை உலகத்தைக் காக்கவல்ல மேகம் வறுமை மிகுந்தாற் போன்ற தன்மை உடையது.

## நாண்உடைமை

**கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்**
**நல்லவர் நாணுப் பிற. 1011**

தகாத செயல் காரணமாக நாணுவதே நாணமாகும். பெண்களுக்கு இயல்பான மற்ற நாணங்கள் வேறு வகையானவை.

**ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறுஅல்ல**
**நாண்உடைமை மாந்தர் சிறப்பு. 1012**

உணவும் உடையும் எஞ்சி நிற்கும் மற்றவையும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை. மக்களின் சிறப்பியல்பாக விளங்குவது நாணுடைமையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊனைக் குறித்த உயிரெல்லாம், நாண்என்னும்**
**நன்மை குறித்தது சால்பு.** 1013

எல்லா உயிர்களும் ஊனாலாகிய உடம்பை இருப்பிடமாகக் கொண்டவை, சால்பு என்பது, நாணம் என்று சொல்லப்படும் நல்ல தன்மையை இருப்பிடமாகக் கொண்டது.

**அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃதுஇன்றேல்**
**பிணி அன்றோ பீடு நடை?** 1014

சான்றோர்க்கு நாணுடைமை அணிகலம் அன்றோ? அந்த அணிகலம் இல்லையானால், பெருமிதமாக நடக்கும் நடை ஒரு நோய் அன்றோ?

**பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு**
**உறைபதி என்னும் உலகு.** 1015

பிறர்க்கு வரும் பழிக்காகவும் தமக்கு வரும் பழிக்காகவும் நாணுகின்றவர், நாணத்திற்கும் உறைவிடமானவர் என்று உலகம் சொல்லும்.

**நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**
**பேணலர் மேலா யவர்.** 1016

நாணமாகிய வேலியைத் தமக்குக் காவலாகச் செய்து கொள்ளாமல், மேலோர் பரந்த உலகில் வாழும் வாழ்க்கையை விரும்பி மேற்கொள்ளமாட்டார்.

**நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்**
**நாண்துறவார் நாண்ஆள் பவர்.** 1017

நாணத்தைத் தமக்குரிய பண்பாகக் கொள்பவர், நாணத்தால் உயிரை விடுவர், உயிரைக் காக்கும் பொருட்டாக நாணத்தை விடமாட்டார்.

**பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து.** 1018

ஒருவன் மற்றவர் நாணத்தக்க பழிக்குக் காரணமாக இருந்தும் தான் நாணாமலிருப்பானானால், அறம் நாணி அவனைக் கைவிடும் தன்மையுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குலம்சுடும் கொள்கை பிழைப்பின், நலம்சுடும்**
**நாணின்மை நின்றக் கடை. 1019**

ஒருவன் கொள்கை தவறினால், அத் தவறு அவனுடைய குடிப்பிறப்பைக் கெடுக்கும். நாணில்லாத தன்மை நிலை பெற்றால் நன்மை எல்லாவற்றையும் கெடுக்கும்.

**நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி யற்று. 1020**

மனத்தில் நாணம் இல்லாதவர் உலகத்தில் இயங்குதல் மரத்தால் செய்த பாவையைக் கயிறு கொண்டு ஆட்டி உயிருள்ளதாக மயக்கினாற் போன்றது.

## குடிசெயல் வகை

**கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையின் பீடுஉடையது இல் 1021**

குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

**ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்**
**நீள்வினையால் நீளும் குடி 1022**

முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

**குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும். 1023**

என் குடியை உயரச்செய்வேன் என்று முயலும் ஒருவனுக்கு ஊழ், ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு தானே முன்வந்து துணை செய்யும்.

**சூழாமல் தானே முடிவுஎய்தம் தம்குடியைத்**
**தாழாது உஞற்று பவர்க்கு 1024**

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்வர்க்கு அவர் ஆராயாமலேயே அச்செயல் தானே நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு.** **1025**

குற்றம் இல்லாதவனாய்க் குடி உயர்வதற்கான செயல் செய்து வாழ்கின்றவனை உலகத்தார் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்து கொள்வர்.

**நல்ஆண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த**
**இல்ஆண்மை ஆக்கிக் கொளல்.** **1026**

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது தான் பிறந்த குடியை ஆளும் சிறப்பைத் தனக்கு உண்டாக்கிக் கொள்வதாகும்.

**அமர்அகத்து வன்கண்ணர் போலத் தமர்அகத்தும்**
**ஆற்றுவார் மேற்றே பொறை** **1027**

போர்க்களத்தில் பலரிடையில் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அஞ்சாத வீரரைப்போல், குடியில் பிறந்தவரிடையிலும் தாங்கவல்லவர்மேல்தான் பொறுப்பு உள்ளது.

**குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து**
**மானம் கருதக் கெடும்.** **1028**

குடி உயர்வதற்கான செயல் செய்கின்றவர்க்கு உரிய காலம் என்று ஒன்று இல்லை. சோம்பல் கொண்டு தம்மானத்தைக் கருதுவாரானால் குடிப்பெருமை கெடும்.

**இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்றம் மறைப்பான் உடம்பு?** **1029**

தன்குடிக்கு வரக்கூடிய குற்றத்தை வராமல் நீக்க முயல்கின்ற ஒருவனுடைய உடம்பு துன்பத்திற்கே இருப்பிடமானதோ?

**இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும்**
**நல்ஆள் இலாத குடி** **1030**

துன்பம் வந்தபோது உடனிருந்து தாங்கவல்ல நல்ல ஆள் இல்லாத குடி, துன்பமாகிய கோடரி அடியில் வெட்டி வீழ்ந்த வீழ்ந்த விழுந்துவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவு

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்**
**உழந்தும் உழவே தலை. 1031**

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது: அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴து ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து 1032**

உழவு செய்ய முடியாமல் உயிர் வாழ்கின்றவர் எல்லாரையும் தாங்குவதால், உழவு செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்.

**உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்**
**தொழுதுஉண்டு பின்செல் பவர். 1033**

உழவு செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர்; மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

**பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்**
**அலகுடை நீழ லவர். 1034**

நெல்வளம் உடைய தண்ணளி பொருந்திய உழவர் பல அரசரின் குடைநிழல்களையும் தம் குடையின் கீழ் காணவல்லவர் ஆவர்.

**இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது**
**கைசெய்துஊண் மாலை யவர். 1035**

கையால் தொழில்செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர் பிறரிடம்சென்று இரக்கமாட்டார்; தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

**உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேம்என் பார்க்கும் நிலை. 1036**

உழவருடைய கை, தொழில் செய்யாமல் மடங்கியிருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் வாழ்வு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்துஎருவும்**
**வேண்டாது சாலப் படும். 1037**

ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும்படி உழுது காலவிட்டால், ஒருபிடி எருவும் இடவேண்டாமல் அந்நிலத்தில் பயிர் செழித்து விளையும்.

**ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின்**
**நீரினும் நன்றுஅதன் காப்பு. 1038**

ஏர் உழுதலைவிட எரு இடுதல் நல்லது; இந்த இரண்டும் செய்து களை நீக்கிய பிறகு, நீர் பாய்ச்சுதலை விடக் காவல் காத்தல் நல்லது.

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும். 1039**

நிலத்திற்கு உரியவன் நிலத்தைச் சென்று பார்க்காமல் வாளா இருந்தால், அந்நிலம் அவனுடைய மனைவியைப் போல் வெறுத்து அவனோடு பிணங்கிவிடும்.

**இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும். 1040**

எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பியிருப்பவரைக் கண்டால், நிலமகள் தன்னுள் சிரிப்பாள்.

## நல்குரவு

**இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது: 1041**

வறுமையைப் போல் துன்பமானது எது என்று கேட்டால், வறுமையைப் போல் துன்பமானது வறுமை ஒன்றே ஆகும்.

**இன்மை எனஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும். 1042**

வறுமை என்று சொல்லப்படும் பாவி ஒருவனை நெருங்கினால், அவனுக்கு மறுமையின்பமும் இம்மையின்பமும் இல்லாமற் போகும் நிலைமை வரும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவு என்னும் நசை.** 1043

வறுமை என்று சொல்லப்படும் ஆசைநிலை ஒருவனைப் பற்றினால் அவனுடைய பழைமையான குடிப்பண்பையும் புகழையும் ஒருசேரக் கெடுக்கும்.

**இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**
**சொற்பிறக்கும் சோர்வு தரும்.** 1044

வறுமை என்பது, நல்ல குடியிற் பிறந்தவரிடத்திலும் இழவு தரும் சொல் பிறப்பதற்குக் காரணமான சோர்வை உண்டாக்கிவிடும்.

**நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்**
**துன்பங்கள் சென்று படும்.** 1045

வறுமை என்று சொல்லப்படும் துன்ப நிலையினுள் பல வகையாக வேறுபட்டுள்ள எல்லாத் துன்பங்களும் சென்று விளைந்திடும்.

**நற்பொருள் நன்குஉணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்**
**சொற்பொருள் சோர்வு படும்.** 1046

நல்ல நூற் பொருளை நன்றாக உணர்ந்து எடுத்துச் சொன்ன போதிலும் வறியவர் சொன்ன சொற்பொருள் கேட்பார் இல்லாமல் பயன்படாமல் போகும்.

**அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்**
**பிறன்போல நோக்குப்படும்.** 1047

அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சேர்ந்தால் பெற்ற தாயாலும் அவன் அயலானைப்போல் புறக்கணித்துப் பார்க்கப்படுவான்.

**இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு.** 1048

நேற்றும் கொலை செய்ததுபோல் துன்புறுத்திய வறுமை இன்றும் என்னிடம் வருமோ என்று வறியவன் நாள்தோறும் கலங்கி வருந்துவான்.

**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதுஒன்றும் கண்பாடு அரிது.** 1049

ஒருவன் நெருப்பினுள் இருந்து தூங்குதலும் முடியும். ஆனால் வறுமை நிலையில் எவ்வகையாலும் கண்மூடித் தூங்குதல் அரிது.

**துப்புரவு இல்லார் துவரத் துறவாமை**
**உப்பிற்கும் காடிக்கும் கூற்று.** 1050

நுகரும் பொருள் இல்லாத வறியவர் முற்றுந் துறக்க கூடியவராக இருந்தும் துறக்காத காரணம், உப்புக்கும் கஞ்சிக்கும் எமனாக இருப்பதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## உதயசீலன் வைத்திலிங்கம்
## (கண்ணன்)

**அன்பின் திருவுருவாய்**
**ஆனந்த புன்முகமாய்**
**இன்பத்தின் எழில் உருவாய்**
**ஈகைக் குணமுடனே**
**உறவை ஒருங்கமைத்து**
**ஊரார் புகழ வைத்து**
**எவரும் எதிலும்**
**ஏழ்மை நிலை தவிர்த்து**
**ஐயமது அகற்றி**
**ஒற்றுமையாய் வாழவென்று**
**ஓதி உவகையுடனே**
**உருத்திரபுரத்தினிலே**
**வைத்திலிங்கம் பெற்றெடுத்த**
**உத்தம புத்திரனாம்**
**உதயசீலன் தன்னுடைய**
**ஆத்மா சாந்திபெற**
**வேண்டி நிற்போம்!**
**என்றென்றும் சாந்தி!**
**சாந்தி!! சாந்தி!!!**

*அன்னாரின் பிரிவால் துயருறும்*
*சகோதரர், உற்றார், உறவினரின் துயரில் பங்குகொள்கிறோம்.*

**உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகம் - கனடா**
**416 - 747 - 7084**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளங்கனிந்த நன்றி

2001-11-30 அன்று இறையடி சேர்ந்த

**அமரர். வைத்திலிங்கம் உதயசீலன்**

அவர்களின் மறைவுகேட்டு எமது இல்லம் நாடி வந்து சகல விதத்திலும் உதவிபுரிந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்த இனிய உள்ளங்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் மற்றும் அந்தியேட்டிகிரியைகளில் பங்குபற்றி கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



இவ்வண்ணம்

**மனைவி, மக்கள்,**

**உறவினர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**வைத்திலிங்கம் + கமலாதேவி**

| திருச்செல்வம் | உதயசீலன் | சுசீலா | விஜயா | வனஜா | கருணா | தயாநிதி | தயாபரன் |
|---|---|---|---|---|---|---|---|
| + | + | + | + | + | | + | |
| யோதீஸ்வரி | ஜெயதேவி | உருத்திரசிங்கம் | ஸ்ரீதரன் | கணேசலிங்கம் | | விக்னேஸ் | |
| குகப்பிரீதன்<br>தனுப்பிரியா<br>சபினா<br>சஜிந்தன | யனுசன்<br>கிருஷன் | உஷாந்தன்<br>துளசிகா<br>பிரஷாந்தன்<br>கிரிஷாந்தன்<br>கபிஷாந்தன் | சுஜித்தா<br>தனுஜா | பதுர்ஷன்<br>முகர்ஷிகா | | | |

மாமா - மாமி

**செல்லத்துரை + யோகநாயகி**

| சந்திரமலர் | மஞ்சுளாதேவி | புனிதகுமார் | ஜெயதேவி | தவயோககுமார் | சுதானந்தகுமார் | கமலேஸ்வரன் | மோகனபவானி |
|---|---|---|---|---|---|---|---|
| + | + | + | + | + | + | | + |
| அருமைப்பிள்ளை | கோணலிங்கம் | சந்திராவதி | உதயசீலன் | லதா மங்கேஷ் | மலைமகள் | | ஜெயராஜ் |
| பிரதீபன்<br>பிரதாபன்<br>பிரபாகினி | பிரசாந்தி<br>நீரஜா<br>சுஜாந்தி | சுலோஜன்<br>கௌதம்<br>கௌசிகன் | யனுசன்<br>கிருஷன் | சஜீவினி<br>வர்ஷினி<br>நிதர்ஷினி | மேகஜன் | | கிருஷோத்<br>வைதேவி<br>வைஷ்ணவி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org